ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2272/40 - 2022 මාර්තු මස 23 වැනි බදාදා - 2022.03.23

*2272/40 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரசப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டம்**

*தேசிய அரசப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**நாமல் ராஜபக்ஷ,**

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்.

கொழும்பு,

*2022, மாச்சு 21.*

1A - G 36455 — 60 (2022/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**பணிப்புரை**

*2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆம் திகதிய 2207/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் வாயிலாக கடைசித் தடவையாக திருத்தம் செய்யப்பட்டதும் 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1990/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகள் கீழ் குறிப்பிடப்படும் வண்ணம் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றன.*

*01.* *அதன் 8 (1) (அ) ஒழுங்குவிதி*

*பதிவுசெய்யப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்கமொன்றின் யாதேனும் தீர்மானத்தினால் அல்லது செயற்பாடொன்றினால் அத்துடன் தேசிய விளையாட்டுச் சங்கமொன்றினால் நியமனம் செய்யப்பட்ட பதவியாளர் தேர்தல் குழு உள்ளடங்கலாக ஏனைய குழுவொன்றின் தீர்மானத்தினால் அதிருப்திக்கு உள்ளான யாதேனும் நபர் ஒருவரினால் அத் தீர்மானம் அல்லது செயற்பாடு பெறப்பட்டு ஏழு நாட்களுள் விளையாட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடத்து எழுத்துமூலமாக மேன்முறையீட்டினை மேற்கொள்ள முடியும்.*

*02.* *8 (1) (ஆ) ஒழுங்குவிதி*

*அம் மேன்முறையீட்டினை உறுதிப்படுத்துவதன் பொருட்டு அவசியமான சாட்சிகள் மற்றும் ஏனைய அவசியமான விடயங்களை, விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் சிறாப்பரிடம் கொடுப்பனவு செய்யப்பட்ட இலங்கையில் செல்லுபடியாகும் பணத்தில் ரூபா ஆறாயிரம் (ரூ.6000.00) மீளச் செலுத்தப்படாத பணமானது (விளையாட்டு வீரர்களைத் தெரிவுசெய்தல் தொடர்பான மேன்முறையீடு தவிர்ந்த) செலுத்தப்பட்டதற்கான கொடுப்பனவுச் சிட்டையின் மூலப்பிரதியுடன் அம் மேன்முறையீட்டினை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளருக்குப் பிரதியொன்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*03.* *8 (3) (ஆ) ஒழுங்குவிதி*

*(இதனகத்துப் பின்னர் 'குழு' என அழைக்கப்படும்) மேன்முறையீட்டு ஆலோசனைக் குழு, இலங்கை உயர் நீதிமன்றத்தில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஓய்வுபெற்ற நீதிபதியொருவரினால், சட்டத்துறையில் பரந்த அறிவினையும் மற்றும் அனுபவத்தினையும் கொண்ட நபர்களினாலும் மற்றும் இலங்கையின் விளையாட்டுத்துறையின் அபிவிருத்தி தொடர்பாக பங்களிப்பினை வழங்கியுள்ள நபர்களினால் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

*04.* *8 (3) (இ) ஒழுங்குவிதி*

*இலங்கை உயர் நீதிமன்றத்தில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஓய்வுபெற்ற நீதிபதியானவர் குழுவின் தலைவராக ஆக வேண்டியதுடன் தலைவர் வருகை தராத சந்தர்ப்பமொன்றில் அங்கத்தவர்களால் கூட்டத்தின் தலைமையினை வகிப்பதற்காக அங்கத்தவர் ஒருவரைத் தெரிவுசெய்து கொள்ளல் வேண்டும்.*

EOG 03 - 0992

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*